## வரையறுக்கப்பட்ட கல்-ஓயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனி – 2016/2017

வரையறுக்கப்பட்ட கல்-ஓயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 கம்பனியின் ஸ்தாபிப்பு மற்றும் உரிமைத்துவம்

2008 செப்தம்பர் 19 இல் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாக வரையறுக்கப்பட்ட கல்-ஓயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனி கூட்டிணைக்கப்பட்டது. கம்பனியின் உரிமைத்துவத்தில் 51 சதவீதத்தினை அரசு கொண்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது அபிப்பிராயத்தில், 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான வரையறுக்கப்பட்ட கல்-ஓயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

(ஆ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன். அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) எனது அபிப்பிராயத்தில் :

- கணக்காய்விற்கு அவசியமானதும், இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லா தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றிருக்கின்றேன் என்பதும், மற்றும்

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கம்பனியின் தொடர்ந்து செல்லும் தன்மை

2006/2007 இலிருந்து கம்பனி தொடர்ச்சியாக நட்டங்களினை உழைத்திருந்ததுடன் 2006/2007 ஆம் ஆண்டில் அந்த நட்டம் ரூபா 219 மில்லியனாகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் 10 வருடங்களின் பின்னர் ரூபா 949 மில்லியன் வரை அது குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தது. இந்த பிரதிகூலமான நிதி நிலையின் காரணமாக, கம்பனி உயர் வட்டி விகிதங்களில் கடன்கள் மற்றும் கடன் பெறுதல்களினைப் பெற்றிருந்தது. இந் நிலைமைகள் தொடர்ந்து செல்லும் தன்மையொன்றாக தொடர்வது கம்பனி பற்றிய நிச்சயமற்ற தன்மையினை சுட்டிக்காட்டுகின்றது. அரசின் சார்பில் கம்பனியின் உரிமைத்துவத்தில் 51 சதவீதத்தினை திறைசேரி கொண்டுள்ளதுடன் இலாபகரமான வியாபாரத்தினை நடாத்திச் செல்வதற்கு இந்த பிரதிகூலமான நிலைமை மற்றும் நிகழ்காலம் தொடர்பில் அவர்களின் அவசியமான பரிந்துரைகளினை மீளாய்வதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 தொடர்புடைய தரப்பினர்களுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல்களினை வெளிப்படுத்தாமை

2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆகஸ்ட் 28 வரையான காலப்பகுதியின் போது ரூபா 477,056,722 தொகையான கடன்கள் மற்றும் கடன் பெறுதல்களினைக் கம்பனி பெற்றிருந்ததுடன், ஆனால் அது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் இந்த கடன்பெறுதல்களுக்கு திறைசேரியிடமிருந்து அங்கீகாரம் பெறப்படவில்லை.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளின் கீழ்க் காட்டப்பட்ட தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிடம் நிலுவையாகவுள்ள ரூபா 795,795 ஆன நீண்டகாலம் வருமதியாகவுள்ள மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நிர்வாகச் செலவினங்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 2,088,899 தொகையான அபராதங்கள் மற்றும் மிகைக்கட்டணங்களின் நீண்டகால நிலுவை மீதி மற்றும் வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகளின் கீழ்க் காட்டப்பட்ட ரூபா 144,607 தொகையான கோரப்படாத படிகளின் மீதியினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 220 ஆம் பிரிவு | கம்பனியின் தேறிய சொத்துக்கள் அதன் குறிப்பிட்ட மூலதனத்தின் அரைவாசியினை விடக் குறைவாகக் காணப்படும் போது, 40 நாட்களுக்குள் அதிவிசேட பொதுக் கூட்டமொன்று நடாத்தப்படல் வேண்டும். ஆனால் கம்பனி ஆரம்பிக்கப்பட்ட 2006/2007 ஆம் ஆண்டிலிருந்து 2011/2012 வரை அவ்வாறான கூட்டமொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை. அந்தக் கூட்டம் 2012/2013 ஆம் ஆண்டிலிருந்து நடாத்தப்பட்டது. ஆனால் அது 40 நாட்களுக்குற்பட்டதாகக் காணப்படவில்லை. 2015/2016 இல், கம்பனியின் தேறிய சொத்துக்கள் ரூபா 2,108,168,227 எதிர்மறைப் பெறுமதியாகக் காணப்பட்ட போதிலும், அதிவிசேட பொதுக்கூட்டம் 2017 பெப்ரவரி 23 இல் நடாத்தப்பட்டது. |
| (ஆ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவு | தொடர்ந்து வரும் மாத்ததின் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அவர்களின் மாதாந்த பங்களிப்பினை தொழில்கொள்வோர் பங்களிப்புச் செய்யவேண்டிய போதிலும், கொடுக்கவேண்டிய நேரத்தில் 2016 யூன், ஆகஸ்ட் மற்றும் செப்தம்பர் மாதங்களுக்கான மாதாந்த பங்களிப்பினை கம்பனி செலுத்தியிருக்காததுடன் ரூபா 95,965 மிகைக்கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் | தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தின் உறுப்புரைகளின் பிரகாரம் சீனி மற்றும் எதனோல் உற்பத்திக்கு கம்பனியினால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதிசார் விளைவுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 905,767,924 ஆன பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 966,946,320 ஆன பற்றாக்குறையொன்றினை விளைவித்திருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 61,178,396 ஆன பற்றாக்குறையொன்றினை சுட்டிக்காட்டுகின்றது. ரூபா 206,411,005 இனால் மொத்த இலாபம் அதிகரித்திருந்த போதிலும் 39 சதவீத அதிகரிப்பாகக் காணப்பட்ட நிதிக் கிரயம் ரூபா 2010,884,819 தொகையொன்றினால் அதாவது 39 சதவீதத்தினால் அதிகரித்தமை மேற்குறித்த பற்றாக்குறைக்கு பிரதான காரணமாக காணப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் முறையே 0.28:1 மற்றும் 0.14:1 ஆகப் பிரதிகூலமாகக் காணப்பட்டதுடன் கம்பனியின் நடைமுறைப் பொறுப்புக்களினை தீர்ப்பனவு செய்வதற்கு கம்பனியில் போதுமையற்ற திரவ மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கம்பனியின் மொத்த இலாப விகிதம் 19.6 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற போதிலும் ஆனால் தேறிய நட்ட விகிதம் 95.9 சதவீதமாகக் காணப்படுகின்றது.

(இ) கம்பனியின் இணைவு விகிதம் 1.86 ஆகப் பிரதிகூலமாகக் காணட்டமை அவதானிக்கப்பட்டதுடன் மொத்தப் பொறுப்புக்களினை தீர்ப்பனவு செய்வதற்கு கம்பனியின் மொத்தச் சொத்துக்கள் போதுமையற்றதாகக் காணப்படுகின்றது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான கம்பனியின் மொத்தப் பொறுப்புக்களினை மிகைத்த மொத்தச் சொத்துக்கள் ரூபா 3,064,962,691 ஆகக் காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் அது 45 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்தது. தொழிற்படு மூலதன தேவைப்பாடுகளுக்கு துணைபுரிவதற்கு கடன் வசதிகளினைக் கம்பனி பெற்றிருந்த போதிலும், அந்த கடன்பெறுதல்களினை தீர்ப்பனவு செய்வதன் பொருட்டு தொழிற்சாலையிலிருந்து போதுமான வருமானத்தினை கம்பனி உழைத்திருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளபடியான கம்பனியின் வங்கி மேலதிகப் பற்று ரூபா 250,576,425 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றுக்கு செலுத்தப்பட்ட வட்டி ரூபா 16,702,149 ஆகக் காணப்பட்டது. ஆகையினால், தொழிற்படு மூலதன முகாமைத்துவம் சாதகமானதொரு நிலையொன்றில் காணப்படவில்லை.

### 3.3 கம்பனியினால் அல்லது கம்பனிக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள்

நடைமுறை ஆண்டின் இறுதியளவில் கம்பனிக்கு எதிராக வெளித்தரப்பினர்களினால் 14 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொடர்புடைய தரப்பினர்கள் மற்றும் நிதி நிறுவகங்களிடமிருந்து 15 சதவீதம் தொடக்கம் 28 சதவீதம் வரையிலான உயர் வட்டி விகிதங்களில் கம்பனி கடன்களினைப் பெற்றிருந்தது. அதற்கமைய, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான கம்பனியின் கடன்கள் மற்றும் கடன்பெறுவனவுகள் ரூபா 5,452,164,390 ஆகக் காணப்பட்டதுடன் அந்த தொகைக்கான வட்டிச் செலவினம் ரூபா 747,416,480 தொகையாகக் காணப்பட்டது.

(ஆ) பங்குதாரர் உடன்படிக்கையின் பிரகாரம், ஹிங்குரான சீனித் தொழிற்சாலையினால் உரிமையைக் கொண்டிருந்த 277 ஹெக்டேயர் காணி 30 வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கு 2006 ஆம் ஆண்டில் குத்தகைக்குவிடப்பட்டிருந்தது. ஆனால், அந்தக் குத்தகைக் காணிகளுக்கு குத்தகை பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஹிங்குரான சீனித் தொழிற்சாலையின் சொத்துக்களினை இடமாற்றுகையில் பெறப்பட்ட வீடுகளில் கம்பனிக்கு தொடர்பில்லாத வெளிதரப்பு நபர்கள் குடியிருந்தனர். அந்த வீடுகளினைப் பெற்ற 94 ஊழியர்களில் 74 ஊழியர்கள் அவர்களின் வீடுகளினை வெளித்தரப்பினருக்கு விற்பனை செய்திருந்ததுடன் 13 கைமாற்றப்பட்டவர்கள் அவர்களின் வீடுகளினை வாடகைக்கு விட்டிருந்தனர்.

(ஈ) ஹிங்குரான தொழிற்சாலையில் 5,202 ஹெக்டேயர் பயிர் செய்யதக்க காணிகளில் 4,441 கரும்பு விவசாயத்திற்குரியதாகக் காணப்பட்டதுடன், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 2779 ஹெக்டேயர் மொத்த பயிர்செய்யத்தகு காணிகள் மற்றும் துளிர் பயிர்ச்செய்கை காணிகள் முறையே 1401 மற்றும் 1378 ஹெக்டேயர்களாகக் காணப்பட்டது. ஆகையினால், வேண்டப்பட்ட சீனி விநியோகத்தினை பெறுவதற்கு போதுமான பயிர்செய்யத்தக்க காணியினை கம்பனி கொண்டிருந்த போதிலும், அதிஉத்தம இயளளவின் கீழ் சீனித் தொழிற்சாலையினை செயற்படுத்தும் பொருட்டு அந்தக் காணிகளினை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு கம்பனியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2010 – 2020 வியாபார திட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக எதிர்பார்க்கப்பட்ட நிதிக் கிரயம் ரூபா 58 மில்லியனாகக் காணப்படல் வேண்டும். ஆனால் உண்மை கிரயம் ரூபா 748 மில்லியனாகக் காணப்பட்டது. ஆகையினால், அது 1,190 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது.

(ஊ) சீனித் தொழிற்சாலையினை கட்டியெழுப்புவதற்கு பெறப்பட்ட ரூபா 2,715 மில்லியன் மொத்தக் கடன் தொகையில் ரூபா 357.12 மில்லியன் தொகை உண்மை நோக்கத்திற்காக அந்தக் கடனினை பயன்படுத்தாது ஏனைய கடன் செலுத்துகைகள் மற்றும் வட்டிகளினை தீர்ப்பனவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது.

(எ) சீனி உற்பத்தி செயற்பாட்டின் உப - உற்பத்தியொன்றாகக் காணப்பட்ட மிகை சீனிப் பாகினை களஞ்சியப்படுத்துவதற்கு தற்போதுள்ள களஞ்சிய தாங்கிகள் போதுமற்றதாக காணப்பட்டமை காரணமாக கம்பனியினால் தொழிற்சாலை வளாகத்தின் வெளியில் மூடப்படாத குழியொன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்தக் குழி நிரம்பி வழிந்திருந்தது. குழியில் களஞ்சியப்படுத்தப்பட்ட அந்த சீனிப்பாகுடன் மழை நீர் சேர்வதன் காரணமாக அந்த சீனிப்பாகின் தரம் ஆபத்தான நிலையொன்றில் காணப்படுகின்றது.

(ஏ) கம்பனியின் பங்குகளில் 49 சதவீத்தினைக் கொண்டிருந்த லங்கா ஓரிக்ஸ் லீசிங் கம்பனி மற்றும் பிரவுன்ஸ் மற்றும் கம்பனியின் கீழ் செயற்படுத்தப்பட்ட கல்-ஓயா ஹோல்டிங்ஸ் கம்பனிக்கு 2010 ஏப்ரல் 26 இல் கம்பனியின் முகாமைத்துவம் கைச்சாத்திடப்பட்ட முகாமைத்துவ உடன்படிக்கையினூடாக வழங்கப்பட்டிருந்த போதிலும், கடந்த 7 ஆண்டுகள் காலப்பகுதியின் போது கம்பனியின் நிதி நெறுக்கடியினை தோற்கடிப்பதற்கு மற்றும் கம்பனியின் செயலாற்றலினை முன்னேற்றுவதற்கு கம்பனியின் முகாமைத்துவம் எவ்வித நடவடிக்கைகளினையும் எடுத்திருக்கவில்லை.

(ஐ) ரூபா 798 மில்லியன் செலவழிப்பதன் மூலம் நிர்மாணிக்கப்பட்ட புதிய வடிகட்டும் தொழிற்சாலையினை செயற்படுத்துவதற்கு வடிகட்டும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், நாளொன்றுக்கு கணிப்பிடப்பட்ட மதிப்பிடப்பட்ட நட்டம் ரூபா 7.5 மில்லியனாகக் காணப்பட்டது. (நாளொன்றுக்கு மதிப்பிடப்பட்ட எதனோல் விற்பனை 21,500 லீட்டர்கள் X விற்பனை விலை ரூபா 350). உற்பத்தி செயற்பாடுகளினை ஆரம்பிப்பதற்கு முடியாததாகக் காணப்பட்ட போதிலும், மாதமொன்றுக்கு ரூபா 14,172,500 மேலதிக பராமரிப்புக் கிரயம் கம்பனிக்கு நேரிட்டது.

## 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்கான ஒரு கிலோ கிராம் சீனி உற்பத்தியின் கிரயம் முறையே ரூபா 133 மற்றும் ரூபா 165 ஆகக் காணப்பட்டது. இது ரூபா 37 மற்றும் ரூபா 60 கடன் பெறுதல் கிரயத்தினை உள்ளடக்கியிருந்தது. ஆனால் ஒரு கிலோ கிராம் சீனியின் சராசரி விற்பனை விலை ரூபா 69 மற்றும் ரூபா 100 ஆகக் காணப்பட்டது. ஆகையினால், விற்பனை விலையினை மிகைத்துக் காணப்பட்ட உற்பத்திக் கிரயத்தினை குறைப்பதன் பொருட்டு குறுங்கால, நடுத்தர கால மற்றும் நீண்டகால செயன்முறைகள் கம்பனியின் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கரும்பின் வருடமொன்றிற்கான அதி உத்தம நொறுக்கும் இயலளவு 400,000 மெற்றிக்தொன்களாக (நாளொன்றுக்கு 2000 எம்ரி x 200 செயற்பாட்டு நாட்கள்) காணப்பட்ட போதிலும், 2012/2013 காலப்பகுதியிலிருந்து சீனித் தொழிற்சாலை அதி உத்தம இயலளவில் செயற்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிற்கு நொறுக்கப்பட்ட மொத்தக் கரும்பு 146,740 மெற்றிக்தொன்களாகவும் மொத்த இயலளவின் 37 சதவீதமாகவும் காணப்பட்டது.

(இ) கடந்த 5 ஆண்டுகளுடன் ஒப்பிடும்பொழுது சீனி மீட்பு குறைவடைந்திருந்ததுடன் 2014/2015 காலப்பகுதியின் போது மற்றும் மீளாய்வாண்டிற்கு முறையே அது 8.1 மற்றும் 6.7 ஆகக் காணப்பட்டது. தொழிற்துறையிலுள்ள ஏனைய போட்டியாளர் தொழிற்சாலைகளுடன் ஒப்பிடுகையில் தாழ்வானதொரு சீனி மீட்பு விகிதத்தினை கம்பனி பதிவுசெய்த போதிலும், இந்த பிரச்சினையினை முறியடிப்பதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடந்த 5 ஆண்டுகளுடன் ஒப்பிடும் பொழுது கரும்பின் சீனி உள்ளடக்கம் குறைவடைந்திருந்ததுடன் அது 2012/2013 இல் 10.9 ஆகக் காணப்பட்டது. ஆனால் அது மீளாய்வாண்டில் 9.1 இற்கு குறைவடைந்திருந்தது. தொழிற்துறையிலுள்ள ஏனைய போட்டியாளர் தொழிற்சாலைகளுடன் ஒப்பிடும்பொழுது, கம்பனியின் சீனிக் கரும்பின் சீனி உள்ளடக்கம் குறைவாகக் காணப்பட்டது.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதுவரித் திணைக்களத்திடமிருந்து அனுமதியினைப் பெற்றுக்கொள்ளாது 513,000 லீட்டர்கள் எதனோல்களினை நொதிக்க மற்றும் களஞ்சியப்படுத்தியமை காரணமாக கம்பனிக்கு எதிரான நீதிமன்ற வழக்கு அம்பாறை மாவட்ட நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2017 யூன் 08 இல் ரூபா 3,850,000 தொகை அபராதமொன்று கம்பனியினால் செலுத்தப்பட்டது.

(ஆ) ஹிங்குறான கினித் தொழிற்சாலையின் அனைத்து அசையாத ஆதனங்களின் உரிமைத்துவம் அரசிற்குக் காணப்பட்ட போதிலும், புதிய வடிகட்டும் கட்டிடத்தினை நிர்மாணிப்பதன் பொருட்டு பழைய வடிகட்டும் கட்டிடத்தினை அகற்றுவதற்கு திறைசேரியிடமிருந்து முறையான அங்கீகாரத்தினை கம்பனி பெற்றிருக்கவில்லை.

**4.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 182 நிரந்தர ஊழியர்கள் மற்றும் 649 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் உள்ளடங்களாக 831 ஊழியர்கள் காணப்பட்டனர். கம்பனியின் பதவியணியினர் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு அல்லது அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நீண்டகாலக் கடன்கள் மற்றும் கடன்பெறுவனவுகள் | நீண்டகால கடன் மீதிகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு நடடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | தொழிற்படு மூலதனப் பராமரிப்பு | குறுங்கால கடன்பெறுவனவுகளின் அதிகரிப்பு மற்றும் பாரிய வட்டிச் செலுத்துகை |
| (இ) | கடன்பட்டோர் கட்டுப்பாடு | அறவிடமுடியாக் கடன்களுக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் கடன்பட்டோர் வயதுப் பகுப்பாய்வின் அடிப்படையில் ஐயக்கடன் காணப்படுகின்றமை. |
| (ஈ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) சீனி மீட்பு சதவீத்தினை அதிகரிப்பதற்கு மற்றும் சீனிக் கரும்பிலுள்ள சீனியின் அளவைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>(ii) அதிஉத்தம இயலளவில் தொழிற்சாலையினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>(iii) முறையானதொரு வகையில் வடிச்சலுக்கு அனுமதியினைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |